

# செயலாற்றுகை அறிக்கை - 2016



விசேட பணிப்பொறுப்பு அமைச்சு

# கடமைப் பொறுப்பு

- 2015.10.24 ஆந் திகதிய 1937/36 என்ற இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக விசேட பணிப் பொறுப்பு அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

- 2015.10.28 ஆந் திகதி செத்சிறிபாய இரண்டாவது கட்டத்தின் ஆறாவது மாடியில் அமைச்சு தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

- 2015.12.18 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக அமைச்சுக்குக் கடமைப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
- அதன் பிரகாரம் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு.

1. தேசிய தேவைப்பாடுகளுக்கமைய அமுற்படுத்தவேண்டிய மற்றும் உடன் கவனம் செலுத்த வேண்டிய துறைகள் தொடர்பிலான விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பங்களிப்புச் செய்தல்

2. அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்படும் விசேட கருத்திட்டங்களை தொடர்புடைய ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.

3. விசேட கருத்திட்டங்களை அமுற்படுத்துவதற்காக ஏனைய அமைச்சர்களுக்கு ஒத்துழைப்பு நல்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

4. பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவின் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தல் தொடர்பான அலுவல்கள்

5. அபிவிருத்தித் துறை பற்றிய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்.

## தொலைநோக்கு

"மகிழ்ச்சி நிறைந்த மக்களுடனான அபிவிருத்திசார் பொருளாதாரமொன்று"

## பணி

"தேசியத் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னுரிமை உரித்தாக்கப்பட வேண்டிய உன்னத நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களில் தேவையான பங்களிப்பினை வழங்குதல், உப முறைசார் பிரவேசங்களினூடாக அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துவதற்கு பங்காற்றுதல் மற்றும் புதிய அறிவினைப் பெருக்குவதற்கு தோள் கொடுப்பதனூடாக கலாசார மற்றும் ஆன்மீகம்சார் பெறுமதிகள் வரைவொன்றினூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துதல்."



# அபிவிருத்தி இலக்குகள்

1. விரைவில் கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய களத்துறைகளின் விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்வதனூடாக தேசியத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவி நல்குதல்.

2. அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்பட்டு வரும் விசேட பணிகளை ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்புச் செய்வதனுடாக பொதுமக்களுக்கு ஆகக்கூடிய சேவையினை வழங்குதல்.

3. அபிவிருத்தி மற்றும் பிரதான பொதுமக்கள் பிரச்சினைகளை இலக்காகக் கொண்ட விசேட கருத்திட்டங்களை அமுற்படுத்துவதற்கு ஏனைய அமைச்சுக்களுக்கு உதவுவதனூடாக அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

4. பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதனூடாக பொருளாதார அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துதல்.

5. அபிவிருத்திக் களத்துறையின் பல்வேறு விடயங்களுக்கான ஆய்வுச் செயற்பாடுகளை வலுவூட்டுவதனூடாக புதிய அறிவினைப் பெருக்குதல்.





பொதுச் சேவை வழங்கல் மறுசீரமைப்பு

## 01. அபிவிருத்தி இலக்கு

விரைவில் கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய களத்துறைகளின் விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்வதனூடாக தேசியத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவி நல்குதல்.





**நோக்கம்**

நிச்சயிக்கப்படும் காலவரையறையினுள் காலத்தின் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய சிறந்த நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

**பிரதான முன்னேற்றச் சுட்டி**

பங்களிப்புச் செய்யப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை





**இலக்குகள்**

அடையாளங்காணப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் நிச்சயிக்கப்பட்ட காலவரையறையினுள் நிறைவு செய்தல்.

**மூலோபாயங்கள**

விடயப் பரப்பினை மிகவும் தெளிவுபடுத்தி நிபுணரின் ஆலோசனையினைப் பயன்படுத்துவதனூடாக நிகழ்ச்சித் திட்டத்தினை மீளவும் உயிர்ப்பெளச் செய்தல்.





**நிகழ்ச்சித் திட்டம்**

பொதுச்சேவை வழங்கல் மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை உருவாக்குதல்

பொதுச் சேவை வழங்கல் மறுசீரமைப்பு

# 01. அபிவிருத்தி இலக்கு – முன்னேற்றம்

## விரைவில் கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய களத்துறைகளின் விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்வதனூடாக தேசியத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவி நல்குதல்.

காலதித்தின் தேவைப்பாடான முக்கியமான விரைவில் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய பல்வேறான களத்துறைகள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி, அக்களத்துறைகளின் விசேட நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துவதனூடாக தேசியத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவி நல்குதல் இவ் அபிவிருத்தி இலக்கின் நோக்கமாகும்.

நிகழ்ச்சித் திட்டம் – பொதுச் சேவைகள் வழங்கல் மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம்.

விசேடமாக தற்போதுள்ள அரச சேவைகள் கட்டமைப்பினை காலத்தின் பொதுமக்கள் தேவைப்பாடுகளுக்கு சிறந்தவாறு பொருந்தக்கூடியவாறும் மற்றும் பொதுமக்கள் பயன்கள் உயர்ந்து செல்லக்கூடிய வகையிலும் நவீனமயப்படுத்துதல் வேண்டும் என்ற சமூகக் கதையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அக்காலத்தின் தேவைப்பாடுகளை அடையாளங் கண்டு நவீனமயப்படுத்தப்பட்டு அரச சேவைகளை வழங்கும் பொறிமுறையொன்றை உருவாக்கும் செயற்பாடுகளுக்கு 2016 ஆம் ஆண்டில் இவ்வமைச்சினால் செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த அரச சேவைகள் மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை அமுற்படுத்துவதனூடாக தற்போது காணப்படும் சட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் செயற் திட்டங்களை மீளாய்வு செய்தல். அதனைக் காலத்திற்குப் பொருந்தக்கூடியவாறு மேம்படுத்துதல், நிறுவனம்சார் மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்புக்களை வேறுபடுத்தல், தேவைப்பாட்டிற்குப் பொருந்தும் உயர்ந்த பண்புகளுடனான மனித வளமொன்றை உருவாக்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் நிர்வாக மறுசீரமைப்புத் தொடர்பில் நிலைபேறான நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிப்பது தொடர்பில் கௌரவ விசேட பணிப்பொறுப்பு அமைச்சர் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய அமைச்சரவையினால் அது தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டு அறிக்கையொன்றை வழங்குவதற்கு அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. கௌரவ விசேட பணிப்பொறுப்பு அமைச்சர் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட இந்த உப குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக கௌரவ நிதி அமைச்சர் மற்றும் கௌரவ அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் விளங்குகின்றனர். அந்த உப குழு அறிக்கையின் வரைவொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் அரசாங்க நிர்வாக மற்றும் முகமைத்துவ அமைச்சுக்கு முன்வைக்கப்பபட்டுள்ளது.



## 02.அபிவிருத்தி இலக்கு

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்பட்டு வரும் விசேட பணிகளை ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்புச் செய்வதனுடாக பொதுமக்களுக்கு ஆகக்கூடிய சேவையினை வழங்குதல்.

## நோக்கங்கள்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் அடிக்கடி ஒப்படைக்கப்பட்டு வரும் விசேட கடமைப் பொறுப்புக்களை தீர்மானிக்கப்படும்காலவரையறையினுள் அமுறப்படுத்துதல்.

## பிரதான முன்னேற்றச் சுட்டி

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் முன்வைக்கப்பட்ட விசேட பணிகளின் எண்ணிக்கை

## இலக்குகள்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் அமைச்சுக்கு முன்வைக்கப்பட்ட விசேட பணிகள் அனைத்தையும் நிச்சயிக்கப்பட்ட காலவரையறையினுள் வெற்றிகரமாக நிறைவு செய்தல்.

# 02. அபிவிருத்தி இலக்கு - முன்னேற்றம்

## அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்பட்டு வரும் விசேட பணிகளை ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்புச் செய்வதனுடாக பொதுமக்களுக்கு ஆகக்கூடிய சேவையினை வழங்குதல்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு நிவாரணங்களை எதிர்பார்த்து நிற்கும் பிரிவினரால் அடிக்கடி முன்வைக்கப்பட்டு வரும் விசேட கவனத்துடனான உடனடியாக நிறைவேற்ற வேண்டிய பணிகள் ஜனாதிபதி செயலகத்தினால் இவ்வமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறான விடயங்களை ஆய்வு செய்து மூலோபாயத் தலையீடொன்றினூடாக உரிய பிரச்சினைகளுக்கு உரிய தொகுதியினருக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இடம்பெறுகின்றது. இதன் கீழ் 2016 ஆம் ஆண்டில் நிவாரணங்களை எதிர்பார்த்து நிற்கும் பல்வேறான நபர்கள் மற்றும் 80 குழுக்களின் மூலம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற கடிதங்கள் இவ்வமைச்சுக்கு முன்வைக்கப்பட்டதன் விளைவாக அச்சகல தொகுதியினருக்கும் நிவாரணங்களை வழங்குவதற்கு பல்வேறான செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செயலகத்தின் அறிவிப்பின் கீழ் விசேட பணிப் பொறுப்பு கௌரவ அமைச்சர் அவர்கள் உள்ளூர்க் கருத்தரங்குகள், கூட்டங்கள், வேலைத்திட்டங்கள் போன்றவை தொடர்பில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டார். 2016 ஆம் ஆண்டில் அவ்வாறான தேசிய மட்டத்தின் 30 தடைவைகள் கௌரவ அமைச்சர் அவர்களினால் இற்றை வரையில் அதமேதகு ஜனாதிபதி அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்




"சமுதாயத்திற்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்" என்ற தலைப்பில் நடாத்தப்பட்ட வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துகொள்ளுதல்




தெற்காசியாவின் நீர்வள முகாமைத்துவம் தொடர்பில் பிராந்திய மகாநாட்டில்ப பிரதானமான பேச்சாளராக கலநதுகொள்ளுதல்

அதிமேதகு ஜனாதிபதி அல்லது ஜனாதிபதி செயலகத்தின் அறிவிப்பின் கீழ் விசேட பணிப்பொறுப்புக் கௌரவ அமைச்சர் அவர்கள் சர்வதேச கருத்தரங்குகள், கூட்டங்கள் மற்றும் வாதாட்டங்களுக்கு இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டதுடன், நல்லிணக்க உடன்படிக்கையினூடாக பொருளாதார அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துதல் இதனூடாக இடம்பெற்றுள்ளது. இதன் கீழ் ஜனாதிபதி செயலகத்தின் அறிவிப்பின் பிரகாரம் கௌரவ அமைச்சர் அவர்கள், அதிமேதகு ஜனாதிபதி அவர்களை நேரடியாகப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜேர்மனி மற்றும் ஜப்பானுக்கு சர்வதேச மட்டங்களில் 02 தடைவைகள் கலந்து கொண்டிருந்தார்.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதான முன்னேற்றக் சுட்டியாக இனங்காணப்பட்டிருப்பது, அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சந்தர்ப்பத்திற்கேற்ப அமைச்சுக்கு முன்வைக்கப்படும் விசேட பணிகளின் எண்ணிக்கை என்பதுடன், அவ்வெண்ணிக்கை முன்பு நிச்சயித்துக் கொள்ள முடியாதிருந்ததுடன் சந்தர்ப்பத்திற்கேற்ப தீர்மானிக்கப்படும். .அவ்வாறு அமைச்சுக்கு முன்வைக்கப்படும் சகல விசேட பணிகளும் அப்பணியின் தன்மைக் கேற்ப தீர்மானிக்கப்படும் குறிப்பிட்ட கால வரையறையினுள் நிறைவு செய்தலினை இலக்காகக் கொண்டு அமைச்சினால் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுற்படுத்தப்பட்டு வருகின்றது.



**போலந்து அரசின் அழைப்பிதழின் பேரில் "ஆசியா – சாந்திகர தினம்" பிரதம பேச்சாளராக கலந்துகொள்ளுதல்.**



**பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட "2016 சார்க் மகாநாடு"**



**புதிய தொழில்நுட்பப் பூங்கா எண்ணக்கரு கற்கை ஆய்வு – சீன உத்தியோகப்பூர்வச் சுற்றுலா**



**தமிழ் புலமைச் சங்கத்தினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட "முத்தமிழ் – 2016" நிகழ்வில் பிரதான விருந்தினராகக் கலந்துகொள்ளுதல்**

## 03. அபிவிருத்தி இலக்கு

அபிவிருத்தி மற்றும் பிரதான பொதுமக்கள் பிரச்சினைகளை இலக்காகக் கொண்ட விசேட கருத்திட்டங்களை அமுற்படுத்துவதற்கு ஏனைய அமைச்சுக்களுக்கு உதவுவதனூடாக அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

## நோக்கம்

அபிவிருத்தி மற்றும் நலன்புரியினை அடிப்படையாகக் கொண்ட விசேட கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் பலாபலனினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு அக்கருத்திட்டங்களை முன்மொழியப்பட்டவாறு அமுற்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தல்.

## பிரதான முன்னேற்றச் சுட்டி

ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட விசேட கருத்திட்டங்களின் எண்ணிக்கை

## இலக்குகள்

அமைச்சரவையினால் ஒப்படைக்கப்படும் கருத்திட்டங்களை குறிப்பிட்ட கால வரையறையினுள் நிறைவு செய்தல்.






# 03. அபிவிருத்தி இலக்கு - முன்னேற்றம்

## அபிவிருத்தி மற்றும் பிரதான பொதுமக்கள் பிரச்சினைகளை இலக்காகக் கொண்ட விசேட கருத்திட்டங்களை அமுற்படுத்துவதற்கு ஏனைய அமைச்சுக்களுக்கு உதவுவதனூடாக அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

அமைச்சரவையினால் அடையாளங் காணப்பட்ட அபிவிருத்தி மற்றும் பிரதான பொதுமக்கள் பிரச்சினைகளை இலக்காகக் கொண்டு விசேட கருத்திட்டங்களை அமுற்படுத்துவதற்குப் பின்வரும் களத்துறைகள் தொடர்பில் 2016 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவின் தலைமைத்துவம் கௌரவ விசேட பணிப்பொறுப்பு அமைச்சரினால் வகிக்கப்பட்டு தேசியப் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தியின் போக்கினை மேம்படுத்துவற்கு மகத்தான பணியொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

1. சலுகை விட்டி வீதத்தின் கீழ் நடுத்தர விவசாய முயற்சியாண்மைகளுக்கு விவசாய நம்பிக்கை நிதியத்திலிருந்து கடன் வழங்குதல்.
2. கனிய வளங்கள் மற்றும் கனிவ வளங்களுடன் தொடர்பான உற்பத்திகளைக் கொள்முதல் செய்தல்.
3. தேசியக் கணக்காய்வுச் சட்டம்
4. கண்டி மாவட்டம் தொடர்பில் இணைந்த நகர மற்றும் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டமொன்றினை அமுற்படுத்துதல்.
5. பிரதேச செயலகப் பிரிவு மட்டங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டங்களில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றினை அமுற்படுத்துதல்.
6. இலங்கைக் கிரிக்கட் நிறுவனத்திலிருந்து இலங்கை அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு அறவீடு செய்யப்பட வேண்டிய நிதிக் கொடுப்பனவு.
7. பழக்கப்படுத்திய யானைகளைக் கட்டுபடுத்துதல் மற்றும் பரீட்சிப்பு முன்னெடுக்கப்பட்டு வரும் நீதிமன்றச் செயற்பாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகளின் மீது கவனஞ் செலுத்துதல்.
8. ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான கருத்திடடப் பிரேரணைகள்.
9. இலங்கை துறைமுக அதிகார சபை, சீன இறங்குதுறை பொறியியல் கம்பனி, சினோகய்ட்றோ கம்பனியுடன் இணைந்து தீர்க்கும் செயற்பாடு.

## 04. அபிவிருத்தி இலக்கு

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதனூடாக பொருளாதார அபிவிருத்தியினைத் துரிதப்படுத்தல்.

## நோக்கம்

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவினால் எடுக்கப்பட்டு வரும் தீர்மானங்களை நிச்சயிக்கப்பட்டு வரும் காலவரையறையினுள் அமுற்படுத்துவதற்கு உதவுதல்.

## பிரதான முன்னேற்றச் சுட்டி

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சரவைக் குழுவுக்கு கலந்து கொண்ட தடைவைகளின் எண்ணிக்கை

## இலக்குகள்

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவின் மூலம் கூட்டச் செயற்பாடுகளின் ஒப்படைக்கப்படும் பணிகளின் எண்ணிக்கையினை விளைதிறனாக ஒருங்கிணைப்புச் செய்தல்.

## நிகழ்ச்சித் திட்டங்கள்

கண்டி பாரிய நகர மேம்பாட்டுத் திட்டத்தினை அமுற்படுத்துவதற்கு உதவுதல் உட்பட பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவினூடாக முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

# 04. அபிவிருத்தி இலக்கு – முன்னேற்றம்

## பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதனூடாக பொருளாதார அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துதல்.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான தீர்வுத் தீர்மானங்களை எடுப்பதற்கு கௌரவப் பிரதமரின் தலைமையில் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழு வாரந்தோறும் கூட்டப்படுகின்றது.

காலத்தின் பொருளாதாரத் தேவைப்பாடுகளின் கீழ் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவுக்கு கௌரவ விசேட பணிப் பொறுப்பு அமைச்சர் தலைமை வகித்து தேசியப் பொருளாதாரச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கு பரந்தளவிலான பங்களிப்பொன்று 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

1. கண்டி நகர அபிவிருத்தித் திட்டம்
2. ஹம்பாந்தோட்டை துறைமுக கருத்திட்டம் தொடர்பில் சலுகை உடன்படிக்கையொன்றினைச் செய்தல்.
3. மாணவர் கடன் பிரேரணைத் திட்டமொன்றினை ஆரம்பிப்பதனூடாக உயர் கல்வி வசதிகளை விரிவுபடுத்துதல்.
4. இலங்கை மின்சார சபையினால் தன்னியக்க வாயு தொழிற்சாலைகளை அமைத்தல்.
5. சிகரட் மற்றும் புகையிலையுடன் தொடர்பான உற்பத்திகளினை அடிப்படையாகக் கொண்டு தீர்வையில் திருத்தங்களைச் செய்தல்.
6. இலங்கைக் கிரிக்கட் நிறுவனம் தொடர்பிலான பிரச்சினைகள்.
7. சேதனைப் பொருள் உற்பத்தி, குளிரூட்டி மற்றும் மின்வலு தொடர்பில் கருத்திட்டமொன்றினை ஆரம்பித்தல்
8. நகர மற்றும் கிராமப் பிதேசங்களை தூய்மையாக வைததிருத்தல்.
9. மத்தளை விமான நிலையக் கருத்திட்டத்திற்கான நிலுவைப் பணம்
10. வரட்சிக்காலத்தில் மின்சாரத்தினை வழங்குதல்.
11. தன்னியக்கத் தொழிற்சாலைகளைச் சுத்திகரித்தல், சீமெந்துத் தொழிற்சாலையினை அமைத்தல் மற்றும் இடமாற்றம் தொடர்பில் கொள்கைகளைத் தயாரித்தல்.

## கண்டி நகர அபிவிருத்தித் திட்டம்

மேற்குறிப்பிட்ட விடயங்களினுள் கண்டி நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தினை அமுறப்படுத்துவதற்கு விசேட பணிப் பொறுப்பு அமைச்சின் நேரடிப் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பல நிறுவனங்களினால் கண்டி நகரம் தொடர்பில் பல்வேறான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுறப்படுத்தப்பட்டு வருவதுடன், அதன் பிரகாரம் கண்டி பாரிய நகர அபிவிருத்திச் செயற்பாடுகளை அமுறப்படுத்தும்போது அச்செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்து முறைாசர் வழிகாட்டலொன்றினை வழங்கும் பொறிமுறையொன்று இருக்கும் தேவைப்பாடு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் கவனஞ் செலுத்தப்படுதல்.

கௌரவ பிரதமரின் அழைப்பின் பேரில் 2016 செப்ரெம்பர் மாதம் ஜப்பானிய ஜயக்கா தூதுக் குழு கண்டி நகரத்தினை புலனாய்வு செய்வதற்கு நாட்டிற்கு வருகை தந்தனர். அவர்கள் கண்டி நகர அபிவிருத்திக்கான தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின விடயப் பரப்பின் நிபந்தனைகள், கடப்பாடுகள் மற்றும் அந்நிகழ்ச்சித் திடடத்தினை அமுறப்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் கவனஞ் செலுத்தியிருந்தனர்.

பிரசித்தி பெற்ற வாஸ்து சாஸ்திர நிபுணர் கெரி கில் அவர்களினால் போகம்பர சிறைச்சாலையினைப் புதுப்பித்தல் தொடர்பில் ஆரம்பத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதே போல சிங்க றெஜிமென்துவ மீளப் புனரமைத்தல், நகராந்திரப் புகையிரதச் சேவையினை உருவாக்குதல் போன்ற வேலைத்திட்டங்களின் மீது கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலாக பல்வேறு நிதி வழங்கும் நிறுவனங்களினூடாக கண்டி நகரின் மேம்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இக்கண்டி மாநகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் மீது நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பொருத்தமான பொறிமுறயொன்றினை பரிந்துரை செய்தல், வழிகாட்டல்களைத் தயாரித்தல் மற்றும் முன்னேற்றத்தினை ஆராய்ந்து பார்த்து பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவுக்கு அறிக்கையிடுவதற்கு அமைச்சர்கள் எட்டுப் பேரினைக் கொண்ட அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் தவிசாளராக விசேட பணிப்பொறுப்பு கௌரவ அமைச்சர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தினை அமுறப்படுத்துவதற்காக அலுவலகமொன்றினை கண்டி நகரில் அமைத்தல், அதற்குத் தேவையான அலுவலகத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை 2016 ஆம் ஆண்டு தொடர்பில் இவ்வமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளினூடாக வழங்குதல், பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவினூடாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன், அமைச்சரவையினால் 2016 நவம்பர் மாதம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், கட்டம்பே மத்திய மாகாண நூலகச் சேவைச் சபையிலிருந்து கண்டி பாரிய நகர அபிவிருத்தி அலகுக்கு அலுவலக வளாக வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ் அலகினை அமைத்தல், அலுவலகத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கு 2016 ஆம் ஆண்டின் அமைச்சின் ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதற்கு நேரிட்டுள்ளது.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுத் தீர்மானத்தினைத் செயற்படுத்துவதற்கு மற்றும் பின்னூட்டலினை முன்னெடுப்பதற்கான குழுவில் (CCEM – OR) தவிசாளராக கௌரவ அமைச்சர் 2016 ஆம் ஆண்டில் செயற்பட்டு வருகின்றார்.




## 05.அபிவிருத்தி இலக்கு

அபிவிருத்திக் களத்துறையின் பல்வேறு விடயங்களுக்கான ஆய்வுச் செயற்பாடுகளை வலுவூட்டுவதனூடாக புதிய அறிவினைப் பெருக்குதல்.

### நோக்கம்

அபிவிருத்திக் களத்துறைக்கான பல்வேறான ஆய்வு முன்மொழிவுகளைத் தெரிவு செய்தல், அங்கீகரித்தல், அமுற்படுத்துதல் தொடர்பில் தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ளுதல்.

### பிரதான முன்னேற்றச்சுட்டி

நிதியிடப்பட்ட ஆய்வு முன்மொழிவுகளின் எண்ணிக்கை



### இலக்குகள்

சமூகப் பொருளாதார அபிவிருத்திக் களத்துறைக்காகத் தெரிவு செய்யப்பட்ட சகல ஆய்வு முன் மொழிவுகளுக்கும் நிதியிடல்.

### மூலோபாயங்கள்

செய்முறை மற்றும் நடைமுறை நிபுணத்துவமிக்க அறிவினை ஒன்றுதிரட்டி துரிதமான பொறிமுறையொன்றினூடாக அபிவிருத்தி ஆய்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், ஆய்வுச் செயற்பாடுகளுக்கு அரச நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுப்பதுடன், ஆய்வுகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் மற்றும் தொழில்வாண்மை அங்கீகாரமொன்றினைப் பெற்றுப் கொடுத்தல்.

### நிகழ்ச்சித் திட்டம்

பொருளாதார அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சி



# 05. அபிவிருத்தி இலக்கு – முன்னேற்றம்

## அபிவிருத்தித் துறையில் பல்வேறு விடயங்களுக்கான ஆய்வுச் செயற்பாடுகளை வலுவூட்டுவதனூடாக புதிய அறிவினைப் பெருக்குதல்.

நாடொன்றின் அபிவிருத்தியில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் (Research and Development) பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதனூடாக உலகப் பொருளாதாரத்தினுள் இந்நாடு அதிகூடிய பயனாளிகளின் மூலோபாய இடமொன்றை (Strategic Position) எட்டிப் பிடித்துக் கொள்ள முடியும்.

எவ்வாறாயினும், அரச பிரிவினுள் அபிவிருத்தி ஆய்வுச் செயற்பாடுகளுக்கு காணப்படுவது குறைவான நாட்டமேயாகும். அரச பிரிவின் உத்தியோகத்தர்களிடமுள்ள பொருளாதார அபிவிருத்திக்குத் தடைகளை ஏற்படுத்தும் கீழ் மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை .சிதறியுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் மற்றும் பல்வேறான களத்துறைகளில் மேம்படுத்தப்பட வேண்டிய பிரிவுகள் தொடர்பில் தமது பகுப்பாய்வினூடாக பெறப்பட்ட அறிவு மற்றும் புரிந்துணர்வு உள்ளது. ஆய்வுத் துறையில் நிபுணர்களைக் கொண்டு ஆய்வுகளை இடம் பெறச் செய்தல் தொடர்பில் தேவைப்படும் நடைமுறை சார் அறிவு உள்ளது. இந்த செய்முறை மற்றும் நடைமுறை அறிவினை ஒன்றுசேர்க்கும் கலப்பான பொறிமுறையொன்றை உருவாக்குவதனூடாக புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்கும், அரச சேவையினுள் ஆய்வுக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்கும், அதனூடாக மிகவும் விரிவான அடிப்படையின் கீழ் பெற்றுக் கொண்ட தகவல்களினூடான அபிவிருத்தியினைத் தீர்மானிப்பதன் காரணமாக பொருளாதார அபிவிருத்தியினை வேகமாக மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் கிடைக்கும் புதிய அறிவினைப் பொருளாதாரத்தினை நோக்கிப் பயன்படுத்துவதனூடாக பொதுவான மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதுடன், அவர்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பலப்படுத்தப்படுவர்.

சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் துறைகளின் மீது ஆய்வு முன்மொழிவுகள் கோரப்பட்டு 2016.06.20 ஆந் திகதி சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் சுற்றுநிரூபமொன்று வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்குப் பிரதிபலிப்பாக 60 ஆய்வு முன்மொழிவுகள் மாத்திரம அமைச்சுக்குக் கிடைக்கப் பெற்றது. அவ்வாய்வு முன்மொழிவுகளில் ஆரம்ப விடயங்கள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட்ட 28 கருத்திட்ட முன்மொழிவுகளை மேலும் கவனத்திற் கொள்ளுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இச் செயற்பாடுகளில் ஆய்வு முன்மொழிவுகளை முன்வைத்து வரும் உத்தியோகத்தர்கள் உரிய அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்டு எடுக்கப்பட்டு வரும் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திக் குழுவின் பரிந்துரையின் கீ ழ் அதன் ஆய்வு முன்மொழிவுகள் விசேட பணிப் பொறுப்பு அமைச்சுக்கு முன்வைத்தல் வேண்டும். விசேட பணிப்பொறுப்பு அமைச்சினால் அமைக்கப்பட்டு எடுக்கப்பட்டுள்ள தேசிய மட்ட ஆய்வு முன்மொழிவுகளை மதிப்பிடுதல் மற்றும் கண்காணிப்புக் குழுவொன்றினூடாக அதன் ஆய்வு முன்மொழிவுகள் தொடர்பிலான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இச்செயற்பாட்டினை விஞ்ஞானம்சார் அடிப்படையில் இடம்பெறச் செய்வதற்கு ஆய்வு முன்மொழிவுகளை முன்வைப்பதற்கான விண்ணப்பப் படிவம் அவ்விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் செயற்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்குமான ஆலோசனைநெறி போன்ற இரு பிரிவுகளுடனான ஆய்வு முன்மொழிவுகளை முன்வைப்பதற்கான வழிகாட்டலும், அதனை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படும் ஆய்வு முன்மொழிவுகளை மதிப்பிடும் வரைவொன்றும் அமைச்சினால் தயாரிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது

அவ்வாறு நிதியிடப்படும் ஆய்வு முன்மொழிவுகளின் எண்ணிக்கை இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதான முன்னேற்ற சுட்டியொன்றாக அடையாளங் காணப்பட்டு 2017 ஆம் ஆண்டில் நிதியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட ஆய்வு முன்மொழிவுகள்

| No. | Name of the Research |
|---|---|
| 01. | Impact of women participation as skilled craftsmen in construction industry |
| 02. | Improvement of income level of beneficiary households through introduction of a self-employment scheme in Horana Relocation Project |
| 03. | Identify current TVET sector-Industry linkage in Sri Lanka & Developing mechanisms to improve these |
| 04. | Compilation of a database depicting the locality differences of Sri Lankan gem varieties with the aid of modern analytical instruments |
| 05. | Genetic analysis of biochemical compounds of Tea (camelia sinensis L) using segregating population |
| 06. | Developing cost effective spray schedules for managing blister blight in tea in order to minimize its effect on cost of production |
| 07. | Feasibility Assessment of Ecotourism in Rubber Plantation Sector in Sri Lanka |
| 08. | Evaluation of the effectiveness of alternative weed control methods and develop economically viable site specific weed management protocol for rubber plantations. |
| 09. | Production of biofilmed biofertilizer to improve soil fertility & fertilizer use efficiency in non-traditional rubber growing areas |
| 10. | Low cost Solar-Biomass hybrid drying system for drying of natural rubber. |
| 11. | An inquiry into the Magnitude & Nature of Time Use among Public Sector Employees. |
| 12. | Reform of the Private Transport sector in Sri Lanka |
| 13. | Remittances to Sri Lanka : What Do We Know ? |
| 14. | Prevalence of fatigue among commercial pilots & the relationship between fatigue & the health issues |

# மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட ஆய்வு முன்மொழிவுகள்

| No. | Name of the Research |
|---|---|
| 15. | Synthesis of Hydrophobic Silica aerogel using Sri Lankan Vein Quarts ( Research done with Sri Lanka Institute of Nano Technology) |
| 16. | Factors affecting business success of small & medium enterprises in Mahaweli areas |
| 17. | The role of Sri Lanka Missions abroad to contribute for the economic development of Sri Lanka through improvement of trade, tourism & investment. |
| 18. | Training Institute for Sri Lankan migrant workers in Lebanon with a view to enhance the social economic benefit to SL by improving their skills, attitudes & productivity. |
| 19. | Micro Financing: Does it serve for the betterment of the rural farmers? |
| 20. | Identification of Private-Private entrepreneur Partnership model to utilize un-employing professionals to develop diary sector in Sri Lanka |
| 21. | Anthracycline induced cardiotoxicity: A clinical ethnopharmacological & biochemical approach. |
| 22. | Relationship between body composition, anthropometric indices & risk factors for the metabolic syndrome & complications in childhood obesity |
| 23. | Comprehensive analysis on the impact of rubber cultivation on rural livelihood in the Eastern Province of Sri Lanka |
| 24. | Development of an Epidemic Surveillance System for the Analysis & Prediction of Dengue Fever Outbreaks |
| 25. | Cord blood creatine phosphokinase (CPK) activity: A guide to diagnose congenital hypothyroidism (CHT). |
| 26. | Economic Building Operations through low energy practices. |
| 27. | Establishing Interventions to promote zero air quality related health issues in urban environments & Buildings |
| 28. | Job satisfaction of Police officers in Colombo |

# அலுவலகக் குழாமின் தகவல்கள்

| தொடர் இல. | பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | 2016.12.31 ஆந் திகதிய அலுவலகக் குழாம் | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 01. | செயலாளர் | 01 | 01 | - |
| 02. | மேலதிக செயலாளர் | 01 | 01 | - |
| 03. | சிரேஸ்ட உதவிச் செயலாளர் | 01 | - | 01 |
| 04. | பிரதான கணக்காளர் | 01 | 01 | - |
| 05. | உதவி/பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 01 | - | 01 |
| 06. | உதவிச் செயலாளர் | 01 | 01 | - |
| 07. | கணக்காளர் | 01 | - | 01 |
| 08. | உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | 01 | - |
| 09. | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | - | 01 |
| 10. | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) | 01 | - | 01 |
| 11. | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| 12. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 07 | 04 | 03 |
| 13. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 08 | 04 | 04 |
| 14. | சாரதி | 05 | 05 | - |
| 15. | அலுவலகப் பணியாளர் | 08 | 08 | - |
| 16. | வீடியோ ஹமரா வல்லுனர் | 01 | - | 01 |
| 17. | ஹமரா வல்லுனர் | 01 | - | 01 |
| 18. | ஹமரா உதவியாளர் | 01 | 01 | - |
| மொத்தம் | | 42 | 28 | 14 |

# அமைப்பு வரைபடம்



செயலாளர்
மேலதிக செயலாளர்
சிரேஸ்ட உதவிச் செயலாளர்
பிரதான கணக்காளர்
கணக்காளர்
மொழிபெயர்ப் பாளர் II / I
உ.செய
உதவிபிரதிப் பணிப். (திட்டமிடல்)
செயலாளரின் ஒருங்கிணைப்புச் செ.
உள். கணக்
நிர்வாக உத்தியோகத்தர்
அபி.உத். (02)
அ.மு.உ. (03)
அபி.உத். (03)
அ.மு.உ. (03)
அபி.உத். (02)
அ.மு.உ. (01)
அ.மு.உ. (01)
அலு. பணியாளர் (02)
அலு. பணியாளர் (04)
விடியோ ஹமரா (01)
விடியோ ஹமரா உ.(01)
சாரதி (05)
படப்பிடிப்பு கலைஞர் (01)
அலு.பணியாளர் (02)

# நிதிசார் முன்னேற்றம் 2016.12.31
## தலைப்பு - 167 விசேட பணிப்பொறுப்பு அமைச்ச
## 01 - செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம
## 01 – அமைச்சர் அலுவலகம்

ரூ. 000

| விபரம் | செலவுத் தலைப்பு | 2016 பாதீடு | 2016 மறுசீரமைக் கப்பட்ட பாதீடு | 2016.12.31 அன்றைய உண்மைச் செலவு | மீதி ஒதுக்கீடு | மொத்தச் செலவின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவுகள்** | | | | | | |
| சம்பளங்கள் மற்றும் கூலிகள் | 1001 | 4,250 | 7,250 | 6,780 | 470 | 94 % |
| மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 1002 | 1,750 | 1,750 | 1,749 | 1 | 100 % |
| ஏனைய கொடுப்பனவு | 1003 | 4,100 | 4,950 | 4,930 | 20 | 100 % |
| உள்ளூர் | 1101 | 500 | 500 | 499 | - | 100 % |
| வெளிநாடு | 1102 | 3,000 | 3,000 | 3,301 | 99 | 97 % |
| எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | 1201 | 750 | 1,700 | 1,651 | 49 | 97% |
| எரிபொருள் | 1202 | 4,000 | 4,000 | 3,696 | 652 | 85 % |
| உணவு பானங்கள் மற்றும் சீருடைகள் | 1203 | 50 | 350 | 218 | 132 | 62 % |
| வாகனங்கள் | 1301 | 1,500 | 1,500 | 598 | 502 | 54 % |
| எந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் | 1302 | 300 | 50 | 0 | 50 | - |
| கட்டிடங்கள் மற்றும் அமைப்புக்கள் | 1303 | 100 | 50 | 0 | 50 | - |
| போக்குவரத்து | 1401 | 1,800 | 1,350 | 1,215 | 135 | 90 % |
| தபால் மற்றும தொடர்பாடல் | 1402 | 1,300 | 1,300 | 1,001 | 299 | 77 % |
| மின்சாரம் மற்றும் நீர் | 1403 | 1,000 | 50 | 7 | 43 | 15 % |
| பிற | 1405 | 500 | 500 | 86 | 65 | 57 % |
| **மூலதனச் செலவுகள்** | | | | | | |
| கட்டிடங்கள் மற்றும் அமைப்புக்கள் | 2001 | 300 | 300 | 0 | 300 | - |
| எந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் | 2002 | 100 | 100 | 100 | - | 100 % |
| வாகனங்கள் | 2003 | 1,200 | 1,200 | 1,200 | - | 100 % |
| வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 2102 | 2,000 | 2,000 | 211 | 1,789 | 11 % |
| எந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் | 2103 | 1,500 | 1,500 | 1,500 | - | 100 % |
| வாகனங்கள் | 2101 | 0 | 43,000 | 32 | 42,968 | 0 % |

## தலைப்பு - 167 விசேட பணிப்பொறுப்பு அமைச்சு
## 01 - செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்
## 02 – தாபன மற்றும் நிர்வாகச் சேவைகள்

| விபரம் | செலவுத் தலைப்பு | 2016 பாதீடு | 2016 மறுசீரமைக்கப்பட்ட பாதீடு | 2016.12.31 அன்றைய உண்மைச் செலவு | மீதி ஒதுக்கீடு | மொத்தச் செலவின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவுகள்** | | | | | | |
| சம்பளங்கள் மற்றும் கூலிகள் | 1001 | 9,500 | 6,500 | 6,148 | 352 | 95 % |
| மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 1002 | 1,500 | 1,500 | 580 | 920 | 39 % |
| ஏனைய கொடுப்பனவு | 1003 | 12,500 | 11,650 | 6,051 | 5,599 | 52 % |
| உள்ளுர் | 1101 | 250 | 250 | 172 | 78 | 69 % |
| வெளிநாடு | 1102 | 1,000 | 1,000 | 0 | 1,000 | - |
| எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | 1201 | 500 | 500 | 499 | 1 | 99 % |
| எரிபொருள் | 1202 | 2,500 | 2,500 | 1,303 | 1,197 | 52 % |
| உணவு பானங்கள் மற்றும் சீருடைகள் | 1203 | 250 | 250 | 86 | 164 | 34 % |
| வாகனங்கள் | 1301 | 3,000 | 3,000 | 355 | 2,645 | 12 % |
| எந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் | 1302 | 800 | 800 | 171 | 629 | 21 % |
| போக்குவரத்து | 1401 | 150 | 600 | 675 | 75 | 90 % |
| தபால் மற்றும தொடர்பாடல் | 1402 | 2,000 | 2,000 | 1,677 | 323 | 84 % |
| மின்சாரம் மற்றும் நீர் | 1403 | 5,000 | 5,000 | 1,548 | 3,452 | 31 % |
| கட்டிடங்கள் மற்றும் அமைப்புக்கள் | 1404 | 15,000 | 15,000 | 14,087 | 1,248 | 92 % |
| பிற | 1405 | 6,000 | 6,000 | 513 | 5,002 | 9 % |
| ஆதனக் கடன் வட்டி | 1506 | 350 | 350 | 56 | 294 | 16 % |
| **மூலதனச் செலவுகள்** | | | | | | |
| கட்டிடங்கள் மற்றும் அமைப்புக்கள் | 2001 | 200 | 200 | 0 | 200 | - |
| எந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் | 2002 | 300 | 300 | 197 | 103 | 66 % |
| வாகனங்கள் | 2003 | 5,000 | 5,000 | 1,560 | 3,440 | 31 % |
| வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 2102 | 1,500 | 1,500 | 1,010 | 490 | 67 % |
| எந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் | 2103 | 2,000 | 2,000 | 1,809 | 191 | 90 % |
| அலுவலகக் குழாம் பயிற்சி | 2401 | 700 | 700 | 316 | 384 | 45 % |
| முதலீடுகள் | 2502 | 50,000 | 50,000 | 4,502 | 45,498 | 9 % |

# அலுவலகக் குழாமுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள்

| பாடநெறி நடாத்தப்பட்ட நிறுவனம் | பாடநெறியின் பெயர் | உத்தியோகத்தர் தொகுதி | கலந்துகொண்ட உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை | நாட்களின் எண்ணிக் கை |
|---|---|---|---|---|
| 01. திறன் விருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சு | ஆட்சேர்ப்புச் செய்தல் | அரச முகாமைத்துவ உதவியாளர்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 | 02 |
| 02. உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சு | கய்சென் முகாமைத்துவம் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | 01 |
| 03. உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சு | ஆரம்ப உற்பத்தித் திறன் எண்ணக்கரு | அலுவலகப் பணியாளர் சேவை | 02 | 01 |
| 04. தேசிய ஊழியப்படை கற்கை நிறுவனம் | கோவைப்படுத்துதல் | அரச முகாமைத்துவ உதவியாளர்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 | 01 |
| 05. PRAG SERVICE | ஆரம்பக் குத்தகை | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 | 01 |
| 06. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | உள்ளகக் கணக்காய்வு மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு | உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | 01 |
| 07. தேசிய ஊழியப்படை கற்கை நிறுவனம் | கோவைப்படுத்துதல் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | 01 |
| 08. தேசிய ஊழியப்படை கற்கை நிறுவனம் | கணக்கீட்டுக் கடமைப்பொறுப்பு | அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>அரச முகாமைத்துவ உதவியாளர் | 02<br>01 | 01 |
| 09. திறன் விருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சு | அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக நடைமுறை | அரச முகாமைத்துவ உதவியாளர்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01<br>01 | 02 |
| 10. திறன் விருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சு | பொருட்களைக் கொள்முதல் செய்தல் மற்றும் மதிப்பிடுதல் | அரச முகாமைத்துவ உதவியாளர்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01<br>01 | 02 |

# அலுவலகக் குழாமுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள்

| பாடநெறி நடாத்தப்பட்ட நிறுவனம் | பாடநெறியின் பெயர் | உத்தியோகத்தர் தொகுதி | கலந்துகொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 11. Distance Learning Center | Result Based Management | உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | 02 |
| 12. தேசிய ஊழியப்படை கற்கை நிறுவனம் | கொள்முதல் பயிற்சி வேலைத்திட்டம் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | 02 |
| 13. திறன் விருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சு | உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டு பயிற்சி வேலைத்திட்டம் | உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | 02 |
| 14. தேசிய ஊழியப்படை கற்கை நிறுவனம் | பிரத்தியேகக் கோவையொன்றை விளைதிறனாக முன்னெடுத்துச் செல்லுதல். | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 | 01 |
| | | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | |
| 15. தேசிய ஊழியப்படை கற்கை நிறுவனம் | உற்பத்தித்திறன் மற்றும் வரைதல் முறைமைகள் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 | 06 |
| | | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | |
| 16. Adams Skills Development Centre | Microsoft Excel பயிற்சிப் பாடநெறி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 | 02 |